# இலங்கையில் மாற்றுக் கருத்துக்களுக்கு எதிரான அடக்குமுறை

**01 ஜூன் - 30 ஜூன் 2015**



பொதுக் கூட்டமொன்றிலிருந்து இதழியலாளர்களை அப்புறப்படுத்திய பின்னர் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக வாசலைப் பொலிசார் காவல்புரிகின்றனர். (Image Tamil Guardian/ @mayurappriyan)

INFORM Human Rights Documentation Centre
www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

**உள்ளடக்கப்ட**

அ. கருத்துச் . . . .

ஆ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்

*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் INFORM நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது*

## சாராம்சம்:

2015 ஜூனில் இலங்கை முழுவதும் , கருத்து வேறுபாட்டின் அடக்குமுறையின் சில சம்பவங்கள் தொடர்ந்ததுடன், இதில் பெரும்பாலானவை வடக்கிலிருந்தும் , கிழக்கிலிருந்தும் அறிக்கையிடப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில், மீள்குடியேற்றத்தையிட்டு கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்றுக்காக அழைக்கப்பட்டிருந்த இதழியலாளர்கள் கூட்டம் நடைபெற்ற இடத்திலிருந்து அகற்றப்பட்டனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினரால் புத்த ஆலயமொன்று கட்டியெழுப்பப்படுவதற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்த கிராமவாசிகள் கைதுசெய்யப்பட்டு , பல மணித்தியாலங்களுக்குத் தடுத்து வைக்கப்பட்டனர். மட்டக்களப்பிலும் , கிழக்கிலும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் தொடர்பான கண்காணிப்பும், அச்சுறுத்தல்களும் அறிக்கையிடப்பட்டன. பெண்களுக்கும் , சிறுவர்களுக்கும் எதிரான பாலியல் வன்முறைக்கு எதிரான போராட்டங்களின் ஒழுங்கமைப்பாளர்களும் , பங்கெடுப்பாளர்களும் மற்றும் ஆதரவாளர்களும் போராட்டங்களின் முன்னரும் , அதன் போதும் , அதன் பின்னரும் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டனர்.

INFORMஇன் மனித உரிமைகள் ஆலோசகர் ரூகி பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணைகளை நிறுத்துவதற்கு பயங்கரவாத விசாரணைத் திணைக்களமும் , சட்ட மாஅதிபர் திணைக்களமும் தொடர்ந்தும் மறுத்தன. ஜூன் 30 அன்று அவருக்கு எதிரான 15 மாத பழமையான பிரயாணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட போதும் , வாய்ப்பூட்டுக் கட்டளையை அகற்றுவதற்கும் , பறிமுதல் செய்யப்பட்ட அவரது தொடர்பாடல் சாதனைகளை மீளளிப்பதற்கும் அவை மறுத்தன.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் , 2015 ஜூனில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை தொடர்பான சம்பவங்களின் தீவிரத்தன்மையும் , எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளதாக த் தோன்றுகின்ற போதிலும் , அத்தகைய சம்பவங்களினதும் மற்றும் பழைய சம்பவங்கள் தொடர்பான விலக்கீட்டுரிமையினதும் தொடர்கின்ற அறிக்கைகள் கவலையளிக்கின்றன.

## அ. கருத்துச் சுதந்திரம்

### 1. மீள்குடியேற்றம் மீதான யாழ்ப்பாணம் பொது உசாவுகையிலிருந்து இதழியலாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுடன் மீள்குடியேற்றம் பற்றி பொது உசாவுகையொன்றுக்கு அழைக்கப்பட்ட பின்னர் , அரசாங்க அதிபரின் எனக் கூறப்படும் கட்டளையின் பேரில் கலந்துரையாடல் ஆரம்பிப்பதற்கு முன் கூட்டத்தை விட்டு வெளியேறுமாறு இதழியலாளர்களுக்கு கூறப்பட்டது. மீள்குடியேற்றத்திற்காக காத்திருப்போரின் அல்லது எதிர்பார்த்திருப்போரின் தேவைகளைச் செவிமடுப்பதற்கே கூட்டம் நடைபெறுகிறது என்றும், கேட்போர்கூடத்தை விட்டு வெளியேறுமாறு இதழியலாளர்களுக்கு கட்டளையிடுவதன் மூலம் அவரது பணியாட் உறுப்பினர்களால் அவரது கட்டளைகள் நேரடியாகப் பின்தொடரப்பட்டன. கேட்போர்கூடத்திலிருந்து இதழியலாளர்களை வெளியேற்றிய பின்னர் , பொலிஸ் காவலுடன் அலுவலர்கள் கதவுகளை மூடிவிட்டனர்.
http://www.tamilguardian.com/article.asp?articleid=15179

### 2. ருகி பெர்னாண்டோ: பிரயாணக் கட்டுப்பாடு அகற்றப்பட்டது , ஆனால் விசாரணை தொடர்வதுடன், வாய்ப்பூட்டுக் கட்டளை தொடர்ந்திருக்கிறது.

நன்கு அறியப்பட்ட இலங்கையின் மனித உரிமைகள் காவலரனான ருகி பெர்னாண்டோ மீது 15 மாதங்களுக்கு முன் விதிக்கப்பட்ட கடல்கடந்த நாடுகளுக்கான பிரயாணக் கட்டுப்பாடுகள் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் 2015 ஜூன் 15 அன்று அகற்றப்பட்டன. ஆனால், அவருக்கு எதிரான பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தினாலான விசாரணையும் , பேச்சு சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பூட்டுக் கட்டளையும் தொடருகின்றன. அவரது பறிமுதல் செய்யப்பட்ட சாதனங்களும் மீளளிக்கப்படவில்லை. 2014 நொவம்பரில் எழுத்துமூலச் சமர்ப்பணமொன்றினாலும், அவரது வழக்கறிஞர்களினால் சட்ட மாஅதிபர் திணைக்களத்துடன் மாதக்கணக்கான கலந்துரையாடலினாலும் பிரயாணக் கட்டுப்பாடு மீதான தளர்வு முன்நிகழ்வாக விளங்கியது. அவர் வெளிநாடுகளுக்கு பிரயாணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னரும், ஒரு தொகையிலான சந்தர்ப்பங்களில் , விமான நிலையத்தில் குடிவரவினாலும் , பயங்கரவாத விசாரணைப் பிரிவினாலும் , அரசாங்கப் புலனாய்வுச் சேவையினாலும் 5-45 நிமிடங்கள் வரை நிறுத்தப்பட்டார். அவர் தாமதங்களையும் , ஏனைய பிரயாணிகள் வெறித்துப்பார்த்ததினால் அவமானத்தையும், சங்கடத்தையும் சகித்துக்கொள்ள வேண்டியிருந்தது.
http://srilankabrief.org/2015/06/travel-restrictions-removed-an-e-mail-from-ruki-fernando/

## ஆ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்

### 3. இராணுவத்தினால் கட்டப்படும் பௌத்த ஆலயத்திற்கு எதிரான போராட்டத்தில் கைதுகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் , கொக்கிளாயில் அமைவிடத்தில் பௌத்த ஆலயமொன்றைக் கட்டுவதற்காக இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட காணியின் உரிமையாளர்கள் நடத்திய போராட்டத்தின் பின்னர் , அவர்களை இலங்கைப் பொலிசார் கைது செய்திருந்தனர். இராணுவத்தினால் நிருமாணிக்கப்பட்ட பௌத்த ஆலயத்திற்கு வெளியே உரிமையாளர்களான திருஞானசம்பந்தர் மணிவண்ணதாஸ், கதிர்காமு சிவயோகேஸ்வரன் மற்றும் லோகநாதன் ஜூட் நிர்மலன் அடையாள உண்ணாவிரதமொன்றை நடத்தினர். அவர்களைப் பொலிசார் கைது செய்ததுடன், ஒரு சில மணித்தியாலங்களுக்குப் பின்னர் அவர்களை விடுவிப்பதற்கு முன்னர்

அவர்களது போராட்டத்தைக் கைவிடுமாறு அவர்களுக்கு இராணுவத்தினர் அழுத்தம் கொடுத்தனர்.
http://www.tamilguardian.com/article.asp?articleid=14956



கடந்த வாரம் கொக்கிளாயில் அமைவிடத்தில் இராணுவம் (@uthayarasashali)

## 4. பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் எதிரான பாலியல் வன்முறைக்கு எதிரான போராட்டங்கள் தொடர்பில் அச்சுறுத்தல்

2015 ஜூன் 1 அன்று , சுமார் 10 மாவட்டங்களில் பெண்களுக்கும் , சிறுவர்களுக்கும் எதிரான பாலியல் வன்முறைக்கு எதிராக ஒரு தொடரிலான போராட்டங்கள் இடம்பெற்றன. போராட்டங்களின் முன்னரும் , அதன் போதும் , அதன் பின்னரும் பெருமளவு மாவட்டங்களில் சாதாரண பொலிசாரினாலும், குற்றவியல் விசாரணைகள் திணைக்களத்தின் அலுவலர்களினாலும் மற்றும் புலனாய்வு முகவராண்மைகளினாலும் ஒழுங்கமைப்பாளர்களும் , பங்கெடுப்பாளர்களும் அச்சுறுத்தலுக்கு உட்பட்டனர். வடக்கில் போராட்டங்களில் பங்கெடுக்குமாறு மக்களுக்கு ஊக்கமளித்த தமிழ் மதகுருமார்களிடம் இந்தப் போராட்டங்களில் கலந்துகொள்ளுமாறு மக்களைக் கேட்க வேண்டாமெனக் கூறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் , வடக்கிலும், கிழக்கிலும் ஆகக்குறைந்தது ஒரு வீட்டுக்கும் , ஒழுங்கமைப்பாளர்களின் ஓர் அலுவலகத்திற்கும் புலனாய்வாளர்கள் சென்றனர். சகல போராட்டங்களிலும் பங்கெடுப்பாளர்களின் புகைப்படங்களைச் சிவிலில் வந்த புலனாய்வு முகவராண்மை ஆளணியினர் எடுத்ததுடன் , ஒரு போராட்டத்தில் யார் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தார் எனவும் கேட்டிருந்தனர்.

## 5. மட்டக்களப்பில் அமைதியான ஒன்றுகூடலுக்கு எதிராக இராணுவத் தொந்தரவுகள்

“மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தின் இராணுவப் புலனாய்வுச் செயற்பாடடாளர்கள் மாவட்டத்தின் சகல 14 பிரிவுகளிலும் சிவில், பொருளாதார, கலாசார மற்றும் சமயக் கூட்டங்களில் பங்கெடுத்தவர்களுக்கு எதிராக கண்காணிப்பினையும் , அச்சுறுத்தலையும் அண்மையில் அதிகரித்திருந்ததனர் ” என ‘தமிழ் நெற் ’ அறிக்கையிட்டிருந்தது. ஆலய முகாமைத்துவத்தின் சபை உறுப்பினர் ஒருவரைக் குறிப்பிட்டு அதே அறிக்கை , “ஒன்றுகூடும் சுதந்திரம் பாரதூரமாக அச்சுறுத்தப்படுகின்றது. பலதரப்பட்ட கூட்டங்களில் பங்கெடுக்கும் பொது மக்கள் கூட விசாரிக்கப்படுகின்றனர் ” எனக் குறிப்பிட்டிருந்தது. “அண்மைய நாட்களில் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், பெண்கள் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஆலய முகாமைத்துவக் குழுக்கள் ஆகியவற்றில் நடைபெற்ற கூட்டங்கள் முறைமையானரீதியில் கண்காணிக்கப்படுகின்றன ” என முறையிட்ட தமது மூலங்களையும் ‘தமிழ் நெற்’ குறிப்பிட்டிருந்தது. “ஆக்கிரமித்துள்ள இலங்கை இராணுவத்துடன் ஒன்றிணையுமாறு நிர்ப்பந்திக்கப்படும் முன்னாள் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் சமூக , கலாசார மற்றும் சமயக் கூட்டங்களில் ‘தீவிரமான’ பங்கெடுப்பாளர்களின் விபரங்களைச் சேகரிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்” என்பதுடன், பின்னர் இரவு நேரங்களின் போது இலங்கை இராணுவப் புலனாய்வு அலுவலர்கள் தொலைபேசி அழைப்புக்களை எடுத்து , கூட்டங்கள் பற்றியும் , கூட்டங்களில் பங்கெடுத்தவர்கள் பற்றியும் கேள்விகள் கேட்டு , செயற்பாட்டாளர்களைத் தொந்தரவு செய்கின்றனர் எனவும் ‘தமிழ் நெற்’ அறிக்கையிட்டிருந்தது.
https://www.tamilnet.com/art.html?catid=13&artid=37818